தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-1-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## <u>தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் குடியரசு தினவிழா</u>

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 67வது குடியரசு தினவிழா இன்று (26-1-2016) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முனைவர் கு. இராமசாமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி குடியரசு தின விழா உரையாற்றினார். வேளாண்மைக்கல்லூரி முதன்மையர் முனைவர் எஸ்.மகிமைராஜா அவர்கள் துணைவேந்தரை வரவேற்றார்.

ஒரே தேசம், நாட்டை ஒன்றிணைக்க இந்தியத் தலைவர்களின் தியாகங்கள் ஆகியவற்றை துணைவேந்தர் அவர்கள் தமது உரையில் நினைவு கூர்ந்தார். இந்தியா 32.8 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்புடன், 4635 இனங்கள் மற்றும் 325 மொழிகள் கொண்ட ஒரு மாபெரும் குடியரசு என்பதையும் தெரிவித்தார். இந்தியாவில் பசுமைப் புரட்சி நடந்த நாள் முதல் நாம் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்று அனைவருக்கும் உணவு அளிக்கும் நிலையடைந்தோம். உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பையும் தற்போதுள்ள தேசத்தின் எதிர்பார்ப்பையும் சுட்டிக்காட்டினார். மக்களின் வாழ்வாதாரம் மற்றும் உணவுப்பாதுகாப்புக்காக நாம் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்போடு செயல்படவேண்டுமென்று அனைவருக்கும் அரைகூவல் விடுத்தார். வேற்றுமையில் ஒற்றுமையே நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்பதை எடுத்துரைத்தார். துணைவேந்தரது, குடியரசு தின உரை அனைவரின் கவனத்தையும் ஈர்த்து தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்துவதாக அமைந்து.

பல்வேறு போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு துணைவேந்தர் அவர்கள் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். பல்கலைக்கழக மாணவர்களின் குடியரசு தின விழா கலை நிகழ்ச்சி நடை பெற்றது. மாணவர்கள் நாட்டுப் பற்று மிக்க நடனங்கள், பாடல்கள் மற்றும் இயற்கை வளம் காக்கும் பாடல்களைப் பாடி அனைவரையும் கவர்ந்தனர்.

முன்னதாக துணைவேந்தர் அவர்கள் பல்கலைக்கழகத்தின் தேசிய மாணவர் படை மாணவர்களோடு தேசிய மாணவர் அதிகாரிகள் செல்லமுத்து மற்றும் மனோன்மணி அளித்த வரவேற்பு மரியாதையை ஏற்றார்.

இந்நிகழ்ச்சியில் சுமார் **350**க்கும் மேற்பட்ட மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், அலுவலர்கன், பல்கலைக்கழகத்திற்குள் செயல்படும் ஆரம்பப் பள்ளி சிறார்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்